# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 56வது கூட்டறிக்கை 2022.10.11

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 56வது அமர்வு 2022.10.11 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. | திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. | திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. | ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. | திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. | திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. | திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 20. | ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | திருமதி.ஏ.பீ.ஏ.சஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 56வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, ஒவ்வொரு கூட்டத்திலும் நான் நமது சபையை நடாத்துவதில் உள்ள பொருளாதார நிலையைப் பற்றி பேசாமல் இருக்க முடியாது. இன்று காலை IMF இன் அறிக்கையின் படி அடுத்த வருடம் உலகிலேயே பொருளாதாரத்தில் ஒரு மந்த நிலை ஏற்படும் ஆபத்து உள்ளது

என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையில் நமது சபை உங்கள் எல்லோரின் ஒத்துழைப்போடும் இயலுமான கட்டுப்பாட்டோடு நாம் இயங்கி வந்திருக்கின்றோம். சபையினால் ஈட்டிய வருமானம் இன்றுவரை 38.467 மில்லியன். சபையினால் இன்றுவரை செலவிட்டிருக்கும் தொகை 43.996 மில்லியன். கிட்டத்தட்ட 6 மில்லியன் வருமானத்திற்கு மேலாக நாம் சேமிப்பில் இருந்த பணத்தில் செலவளித்திருக்கின்றோம். இன்றய நிலமை நமது கையில் 31.9 மில்லியன் கையிருப்பில் இருக்கின்றது. சராசரி நமக்கு மாதாந்த செலவீனங்கள் அபிவிருத்தி வேலைகளை தவிர்ந்த செலவீனங்கள் ஏறத்தாள 5.4 மில்லியன் தேவைப்படுகின்றது. அந்த செலவீனங்களை மட்டும் செய்து கொண்டு போனால் 05 மாத காலத்திற்கு இருக்கும் நிதியோடு சபையை நடாத்திக் கொண்டு செல்லலாம். அதற்கு மேலாக நமக்கு வரக் கூடிய வருமானங்கள் நீதிமன்ற தண்டப்பணம் 2021 ஆம் ஆண்டுக்கான 02 மாதத்திற்குரிய பணம் வர வேண்டி இருக்கின்றது. நீதிமன்ற தண்டப்பணம் இந்த வருட இறுதியில் அல்லது அடுத்த வருடம் பணம் வரலாம். முத்திரை தீர்வு 2021 ஆம் ஆண்டின் பின் 06 மாதங்கள் வர வேண்டியதாக இருக்கின்றது. இன்றுவரை அறிந்ததில் 1.2 மில்லியன் வரக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது செலவீனங்கள் ஏறத்தாள 02, 03 மடங்கு அதிகரித்திருக்கின்றது. முக்கியமாக எரிபொருள் இல்லாமல் எம்மால் வேலை செய்ய இயலாது. இயந்திரங்களை பராமரிப்பது, இப்படியான நிலையில் அரசாங்கத்தின் அறிவித்தல்களை பார்க்கும் போது நமது நாட்டின் ஜனாதிபதி அவர்கள் உள்ளூராட்சி தேர்தல் சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு அங்கத்தவர் தொகை குறைக்கப்பட்டு அதன் பின்தான் தேர்தல் நடத்தப்படும் என்ற ஒரு அறிகுறியும் இருக்கும் நேரத்தில், நாம் இந்த பணத்தை சிக்கனமாக செலவு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அதற்காக முழுப் பொறுப்பையும் தவிசாளர் என்ற ரீதியில் நான் எடுக்காமல் கௌரவ ஜனாதிபதி அவர்கள் இன்னுமொரு கருத்தை கூறியிருந்தார். எதிர்காலத்தில் ஒரு சபையின் சட்ட ரீதியான அதிகாரத்தை தற்போது அது தவிசாளர் கையில் இருப்பது, அதை தவிசாளர் தலமையில் உள்ள ஒரு குழுவிற்கு சட்ட ரீதியாக மாற்றும் கருத்தையும் முன்வைத்திருந்தார்.

சம்மாந்துறை பிரதேச சபையை பொருத்தமட்டில் 2011 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை ஏறத்தாள 100 இற்கு மேலதிகமான அமர்வுகள் இருந்தும் நமது மாற்றுக் கருத்துகளை பரிமாரியும் நமது முடிவுகள் எல்லாம் ஏகமனதான முடிவுகளாக இருக்கின்றது. அந்த முன்மாதிரியை தொடர்ந்து நாம் ஏன் நமக்குள் முன்மொழியப்பட்ட திட்டத்தை சட்டரீதியாக நாம் ஒரு தீர்மானம் எடுத்து, நாம் ஒரு குழுவை உருவாக்கி, அந்தக் குழு கிழமைக்கு ஒரு தடவை சபையில் கூடி சபை நடவடிக்கைகளை தீர்மானிக்கும் குழுவாக இயங்கும் போது அது ஆரோக்கியமானதாக அமையும். நாம் நாட்டுக்கு முன்னுதாரணமாக இருக்கலாம். அதை செய்வதற்கு நான் தயார். நாம் முன்மாதிரியாக இருந்திருக்கின்றோம். அதே போல் இப்படியும் அந்த திட்டத்தை செயற்படுத்தவும், சட்டரீதியான அழுத்தங்கள் தேவையில்லை நாங்களே செய்து கொள்வோம் என்ற ரீதியில் இந்த விடயத்தில் ஒரு முடிவை எடுத்து செயற்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றேன்.

உதாரணத்திற்கு இந்த சபையில் நாம் உத்தியோகபூர்வமாக 03 கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் எதார்த்த நிலையில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கின்றது. ACMC இல் 2 குழுக்கள் இயங்குகின்றது. UNP இல் SLMC என்ற ஒரு பிரதிநிதித்துவம் இருக்கின்றது. ஸ்ரீ.சு.க இன் அங்கத்தவர்கள், பொதுஜன பெரமுன இல் தேர்தல் கேட்ட ஒரு உறுப்பினரும் இருக்கின்றார். இவை எல்லாவற்றையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஒரு குழுவை உருவாக்கி அந்த குழுவின் மூலம் நமது நடவடிக்கைகளை கொண்டு செல்ல வேண்டும் என்பது எனது ஆலோசணை. சபை தீர்மானம் எடுக்கும் நேரத்தில் உங்களின் கருத்துகளை உள்வாங்கி முடிவை எடுக்கலாம் என்ற எண்ணத்தை உங்கள் மத்தியில் முன்வைக்கின்றேன்.

அல் அர்ஷத் பாடசாலை மாணவர்களை கௌரவித்ததற்காக நன்றி தெரிவித்து கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருக்கின்றது.

அதே போல் சென்ற வாரம் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ரிஷாட் பதியுதீன் அவர்கள் நமது ஊருக்கு வருகை தந்து அவரின் நிதி

ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட வீரமுனை பொதுநூலகத்தை பார்வையிட்டு சென்றிருக்கின்றார். சென்ற கிழமை LDSP திட்டத்தின் கீழ் முன்மொழிவுகள் செய்வதற்காக ஒரு அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் முன்மொழியப்பட்ட விடயங்கள் உங்களுக்காக தரப்படும். பின்னர் அதை உத்தியோகபூர்வமாக விவாதித்து முடிவுகளை எடுக்கும் சந்தர்ப்பம் வரும். அதை உங்களுக்கு தரும் படி செயலாளரை பணிக்கின்றேன்.

அடுத்தாக இறைச்சிக் கடை குத்தகை 2023. இதில் நான் ஒரு முறை கூறியவாறு சராசரியாக ஒவ்வொரு கிலோ இறைச்சிக்கும் சபைக்கு 56 ரூபா தான் வருகின்றது. அதில்தான் மடுவம் நடத்துவது அவர்களின் கழிவுகளை அகற்றுவது எல்லாம் நடப்பது அதற்குள்தான். இதில் மாற்றம் கொண்டு வருவதானால் அடுத்த வருட ஏலத்திற்கு எவரும் விண்ணப்பிக்காமல் ஆளுநரிடம் அனுமதி எடுக்க வேண்டும் இதை குறைப்பதற்கு. ஆனால் ஒன்று விளங்க வேண்டும். சபையின் வருமானங்களில் முக்கிய வருமானம் இறைச்சிக்கடை. யார் எதைக் கதைத்தாலும் சபை வருமானம் இல்லாமல் போக இயலாது. இந்த வருடம் பெரும் உதவியாக இருந்தது நடுக்கட்டு உத்தியோகத்தர்கள். அவர்கள் இரண்டு பெரும் கிட்டத்தட்ட 7, 8 மில்லியன் அறவீடு செய்திருக்கின்றார்கள். நாம் மதிப்பீடு செய்த வருமானம் 7.3 மில்லியன் நாம் ஈட்டியது 8.1 மில்லியன். சென்ற வருடம் அதே அளவு எடுத்தோம். ஆனால் இந்த வருடம் பொருளாதார பிரச்சினைக்குள்ளும் தொடர்ந்து அர்ப்பணிப்போடு வேலை செய்வதால் அந்த வருமானம் சபைக்கு வந்து கொண்டிருக்கின்றது. சபையின் முக்கிய வருமானங்கள் இறைச்சிக்கடை, திறந்தவெளி பொதுச் சந்தை வாடகை, வரிகள் இதை குறைப்பதால் சபையை நடத்த சவால்கள் ஏற்படும்.

அடுத்தது 2022 ஆம் ஆண்டில் குத்தகைக்கு பெறாத இறைச்சிக் கடைகளின் குத்தகைத் தொகையினை குறைப்புச் செய்தல். என்னைப் பொருத்தவரையில் எடுக்கப்படாததையும் குறைக்காமல் குத்தகைக்கு வழங்குவோம். அதை எடுக்காவிட்டால் அப்படியோ இருக்கட்டும். பழைய மார்க்கட் கடை எடுபடவில்லை. ஹிஜ்ரா மார்க்கட் இற்குள் 2வது கடை எடுபடவில்லை. அதனால் முதலாவது கடை தொடர்ந்து இயங்கியது. தற்போது இருக்கின்ற வியாபாரத்திற்கு அவ்விடத்தில் 2 கடை வியாபாரம் சவாலாக இருக்கும். அதே போல் சியாச் சந்தி எடுபடவில்லை. பின்னர் மாதாந்த குத்தகையில் அது எடுக்கப்பட்டது. நிரந்தரமாக தற்போது மூடப்பட்டிருக்கின்ற இடங்கள் பழைய மார்கட் மாத்திரம்தான். இல்லாவிட்டால் சலுகையாக வழமையான ஏற்பாடு என்னவென்றால் முழு வருடத்திற்குரிய தொகையில் 06 மாதத்திற்குரியது Deposite ஆக கட்டப்பட்டு ஏனைய 06 மாதத்திற்கு இறுதி பெறுமதிக்கு சபைக்கு எழுதப்பட வேண்டும். அந்த சுமையை குறைப்பது என்றால் நாம் அதை 03 மாதமாக மாற்றலாம். 03 மாத Deposite எஞ்சியதை மாதாந்தம் கட்டுவது. அதில் ஒரு ஆபத்து என்னவென்றால் 03 மாதத்திற்கு பின்னர் விட்டால் நீதிமன்றத்திற்குதான் செல்ல வேண்டும் அந்தப் பணத்தை எடுப்பதற்கு. மக்கள் ஆரம்பத்தில் எவ்வளவோ விமர்சித்தாலும் யதார்த்தத்தை விளங்கிவிட்டார்கள்.

கல்முனை மாநகர சபை Face Book இல் போட்டு இறுதியில் ஒன்றும் நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலைக்கு வந்தது. அதனால் என்னுடைய ஆலோசனை அப்படியோ அந்த நிலையிலே இருக்கட்டும் எடுப்பவர்கள் எடுக்கட்டும், எடுக்காதது இருக்கட்டும். ஆனால் சபையின் கருத்துகளை உள்வாங்கி முடிவு எடுப்போம். இறைச்சியின் விலை உயர்வுக்கு சபை காரணம் அல்ல. தற்போது எல்லோருக்கும் விளங்கிவிட்டது. நான் அண்மையில் ஏறாவூருக்கு சென்றிருந்தேன். ஒரே ஒரு இறைச்சிக் கடை திறந்து இருந்தது. தனி இறைச்சி கேட்டேன். தனி இறைச்சி கொடுக்க இயலாது என்று சொன்னார்கள். 1800.00 ரூபாவுக்கு எலும்புடன் இறைச்சி தருகின்றோம். தனி இறைச்சி இல்லை. தனி இறைச்சி கொடுப்பது என்றால் 2000.00 ரூபாவுக்கு மேலாக கொடுக்க வேண்டும். அப்படி விற்றால் வாங்க மாட்டார்கள். ஏறாவூர் அப்படி என்றால் சம்மாந்துறையின் நிலமை. அந்த விமர்சனங்கள் எவ்வளவு வந்தாலும் நாம் சரியான முடிவில் இருக்க வேண்டும். இதில் ஏதாவது மாற்றங்கள் கொண்டு வர வேண்டுமா?

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பழைய மார்க்கட் கடையறை சென்றமுறையும் எடுக்கப்படவில்லை. அதை இறைச்சிக் கடை அல்லாமல் வேறு ஒரு கடையாக மாற்றலாமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை மாற்றுவோம். நாம் கோழிக் கடை வைக்கலாம் என்றால் வைக்கலாம். மரக்கறி கடை வைக்கலாம். அந்த பிரதேசத்தின் மக்கள் கொள்வனவு செய்கின்ற விதத்தில்தான் இருக்கின்றது. அடுத்த வருடம் அதை ஏலத்திற்கு எடுக்காவிட்டால் அதை மாற்றலாம்.

**தீர்மானம் - 04/56/01**
சம்மாந்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட திறந்த வெளி பொதுச் சந்தை, இறைச்சிக்கடைகளை 2023 ஆம் ஆண்டில் கீழ்வரும் பட்டியலுக்கமைய கேள்வி கோரி குத்தகைக்கு விடுவதற்கான தீர்மானம்.

குத்தகைக்கு விடப்படவுள்ள இறைச்சிக் கடைகளினது மீது தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டண விபரங்களும், கேட்கக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகைகள்

| இல | விபரம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்பு (மீளளிக்கக் கூடியது) | 2022 ஆம் ஆண்டின் குத்தகை தொகை (வற்வரி நீங்கலாக) | 2023 ஆம் ஆண்டுக்கான கேள்வி தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | பொதுச்சந்தை திறந்தவெளி சம்மாந்துறை | 2500.00 | 20,000.00 | 8,010,500.00 | 8,010,500.00 |
| 02 | பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை (பழைய சந்தை) | 2500.00 | 10000.00 | 1,716,055.90 | 1,716,055.90 |
| 03 | ஹிஜ்றா பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை – 01 | 2500.00 | 15000.00 | 2,110,044.00 | 2,110,044.00 |
| 04 | ஹிஜ்றா பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை – 02 | 2500.00 | 20000.00 | 2,200,211.00 | 2,200,211.00 |
| 05 | ஹிஜ்றா பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 312,200.00 | 312,200.00 |
| 06 | மல்வத்தை பொதுச்சந்தை திறந்த வெளி | 500.00 | 2000.00 | 210,575.00 | 210,575.00 |
| 07 | சேகலையர் வண்டு மாட்டிறைச்சிக்கடை (கொச்சிக்கதூளர் சந்தி ஹிஜ்றா புரம் மார்க்கட்) | 2500.00 | 15000.00 | 2,050,750.00 | 2,050,750.00 |

மேலும் எமது சபைக்கு சொந்தமல்லாத கீழே பெயர் குறிப்பிடப்படும் இறைச்சிக் கடைகளை நாளாந்த கழிவுக்கட்டண அறவீடு அடிப்படையில் கீழே உள்ள பட்டியலுக்கு அமைவாக வழங்குவதற்கு (350 நாட்கள்) தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| இல | விபரம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்பு (மீளளிக்கக் கூடியது) | 2022 ஆம் ஆண்டின் குத்தகை தொகை (வற்வரி நீங்கலாக) | 2023 ஆம் ஆண்டுக்கான கேள்வி தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | நெய்னாகாடு மாட்டிறைச்சிக்கடை | 2500.00 | 10000.00 | 612.10 | 612.10 |
| 02 | கைகாட்டிச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | 2500.00 | 10000.00 | 7,500.00 | 7,500.00 |
| 03 | செலயிடசந்தி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 58.87 | 58.87 |
| 04 | அம்பாறை வீதி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 66.00 | 66.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 05 | கல்லரச்சல் மாட்டிறைச்சிக்கடை | 2500.00 | 10000.00 | 5,125.00 | 5,125.00 |
| 06 | வங்களாவடி மாட்டிறைச்சிக்கடை | 2500.00 | 10000.00 | 3,702.00 | 3,702.00 |
| 07 | மஜீட்புரம் மாட்டிறைச்சிக்கடை | 2500.00 | 10000.00 | 560.00 | 560.00 |
| 08 | வளத்தாப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 2500.00 | 10000.00 | 725.00 | 725.00 |
| 09 | சியாச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | 2500.00 | 15000.00 | 5,515.00 | 5,515.00 |
| 10 | மல்வத்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 60.00 | 60.00 |
| 11 | கண்டியர்ர சந்தி மாட்டிறைச்சிக்கடை (தைக்காப்பள்ளிவீதி பிரதேசம்) | 2500.00 | 10000.00 | 5,900.00 | 5,900.00 |
| 12 | நாய்க்குட்டியர்ர சந்தி மாட்டிறைச்சிக்கடை (உடங்கா-02) | 2500.00 | 10000.00 | 5,100.00 | 5,100.00 |

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/02**

2023 இல் வழங்குநர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்வதற்கு பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அரசாங்கம் மீண்டும் குடும்ப தகவல்களை சேகரிக்கின்றார்கள். இந்த தகவல் பிரதேச சபையிலும் இருக்க வேண்டும். இருந்தால்தான் நாமும் முடிவு எடுக்கலாம். நான் சொன்னேன் சபையின் அங்கீகாரத்தோடு இந்த படிவத்தை அச்சிட்டு வழங்குகின்றோம். ஆனால் இது எல்லாம் சபையில் இருக்க வேண்டும். நாங்கள் ஒரு Data Bank இனை உருவாக்கி வலைத்தளங்களில் Password Protection உடன் கிராம சேவகர் மாத்திரம்தான் தகவல்களை மாற்றலாம். நாம் எல்லோரும் பார்க்கலாம். அப்படியானால் விபரங்கள் எல்லோருக்கும் தெரியும். இந்த ஊரில் 52 வீதமானவர்கள் சமுர்த்தி எடுக்கின்றார்கள். அது நியாயமா? இல்லையா? என்று கேட்பதற்கு தயங்குகின்றார்கள். ஏனென்றால் நாங்கள் பழிபடுவோம் என்று, ஆனால் நாம் கட்டாயமாக கேட்க வேண்டும். இன்னுமொருவர் வந்து பிழை பிடிப்பதை விட நாம் நாமாக திருத்திக் கொண்டால்தான் சரி. என்னைப் பொருத்தவரைக்கும் இந்த தகவல் திரட்டப்பட்டவுடன் எல்லாம் வெளிவரும். உணவுப் பார்சல் வழங்கியதில் வறுமை கைநீட்டி உணவு வாங்குவதற்கு இவ்வளவு ஆட்கள் இருக்கின்றார்கள். எங்கு இருக்கின்றது என்று நமக்கு தெரியும். ஆனால் அந்த மக்களுக்கு சமுர்த்தி இல்லை. உணவுப் பார்சல் கொடுப்பவர்கள் சமுர்த்தி வைத்திருக்கலாம். இதை சுட்டிக் காட்டுவதற்கு எவரும் இல்லை.

**தீர்மானம் - 04/56/03**
கிராம அலுவலர்கள் நலன்புரிச் சங்கத்தினால் சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள குடும்பங்களின் தகவல்களைப் பெறுவதற்கான படிவம் 25,000 அச்சிட்டு வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/04**
கீழ்வரும் பிரதேசங்களில் புதிதாக ஆதனவரி மதிப்பீடு செய்வதற்கான தீர்மானம்

1. புளக் ஜே மேற்கு – 02
2. கிராம சேவகர் பிரிவின் S வாய்க்கால் வீதிக்குத் தென்புறத்திலுள்ள பகுதி
3. மல்வத்தை – 01, மல்வத்தை – 02, மல்வத்தை – 03, மல்வத்தை – 04
4. வளத்தாப்பிட்டி – 01, வளத்தாப்பிட்டி – 02
5. மல்காம்பிட்டி
6. சென்னல் கிராமம் - 01, சென்னல் கிராமம் - 02

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/05**
49 – 3938 இலக்க உழவு இயந்திரத்திற்கு புதிய மின்கலம் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/06**
ZA - 5277 இலக்க JCB இயந்திரத்திற்கு புதிய மின்கலம் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/07**
LE – 7441 இலக்க மகேந்திரா கெப் புதிய வில்லு தகடுகள் மாற்றுவதற்கும், ஏனையவற்றை திருத்தம் செய்வதற்குமான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எச்.அன்வர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பழைய பிரதேச சபையில் சேர்விஸ் செட் மற்றும் வாகனங்கள் இருக்கின்றது. எலும்பு அரைக்கும் நிலையத்திலும் வாகனங்கள் இருக்கின்றது. ஒரு தடவை டீசல் களவு போனது. இதனால் அவை இரண்டிற்கும் CCTV கமரா பொருத்துவது பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அதில் இருக்கின்ற சேவிஸ் செட் இனை Private ஆகவும் செய்ய இயலுமா? சபைக்கு ஒரு வருமானம் ஈட்டக் கூடிய வழியாகவும் இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நானும் அதை யோசித்தேன். அந்தளவுக்கு நம்மிடம் வசதி இல்லை. நம்மிடம் இருப்பது எல்லாம் பழைய வாகனங்கள். Electronic வாகனங்களில் சரியானதாக இல்லாமல் செய்யும் போது பிரச்சினைகள் வரலாம். CCTV பொருத்துவதற்கு ஒரு காரணம் Private வேலைகள் பார்க்கக் கூடாது என்று.

**தீர்மானம் - 04/56/08**

பழைய பிரதேச சபை காரியாலயத்திற்கும், எலும்பு அரைக்கும் நிலையத்திற்கும் CCTV கமரா பொருத்துவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

Road Inventory சம்மந்தமாக இந்தக் கிழமைக்குள் ஒரு கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்வோம். அதில் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி கலந்துரையாடுவோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 54வது அமர்வில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை ஒட்டியதாகத்தான் இந்த முன்மொழிவையும் முன்வைக்கின்றேன். நேற்றும் நீங்கள் சென்று பார்வையிட்டதாக அறிந்தேன். மிகவும் இந்தப் பிராந்தியத்தில் இல்லாத அளவுக்கு ஒரு விஸ்தீரணமான மைதானம் அமையப்பெற்றிருக்கின்றது. அதிலே சபையில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் அதில் உரிமை இருக்கின்றது. அதில் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனென்றால் நமது பிரதேச விளையாட்டு வீரர்கள் எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லாமல் தங்களுடைய திறமையினாலேயே முன்னேறிக் கொண்டு வருகின்றார்கள். பல துறைகளிலே அண்மையில் பாடசாலை மட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட Table Tennis போட்டியிலே கிழக்கு மாகாணத்திலே 3ம் இடத்திற்கு வந்திருக்கின்றார்கள் நமது ஊரைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் இத்தனைக்கும் அந்த மூன்று பேரும் ஒருவர் காலிலே காலணி இல்லாமலும், மற்றவர் சாதாரணமாக பாடசாலைக்கு அணிகின்ற காலணியுடனும் மற்றவர் Running Shoe மூன்றுமே அந்த விளையாட்டுக்கு பொருத்தம் இல்லாத காலணியுடன் சென்று 03ம் இடத்தைப் பெற்றிருக்கின்றார்கள்.

அடுத்ததாக றெக்கட் மிகவும் விலை குறைந்த அந்தப் போட்டிக்கு பயன்படுத்த முடியாத றெக்கட் இனை வைத்து விளையாடி இருக்கின்றார்கள். அங்கே நடுவர்களாக வந்தவர்கள் அந்த றெக்கட் இனை வாங்கி வைத்து இவர்கள் ஒரு றெக்கட் இனை கொடுத்து விளையாடுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் அவர்களுடைய சொந்த முயற்சியினாலும் திறமையினாலும் முன் வருகின்ற மாணவர்களுக்கு எங்களாலான உதவிகளை செய்ய வேண்டும். சம்மாந்துறை மத்திய மஹா வித்தியாலயத்திலே கூடுதலான எண்ணிக்கையான பயிற்றுவிப்பாளர்கள் இருந்தும் இந்த Table Tennis இற்கு எந்தவொரு பயிற்றுவிப்பாளர் கூட இருக்கவில்லை. Youtube இலே பார்த்து எங்களுடைய மாணவர்கள் சுயமாக பயிற்சி பெற்றுத்தான் அந்தப் போட்டியிலே வெற்றி பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரினால் கடந்த கிழமை காலணி வழங்கி அன்பளிப்பு செய்யப்பட்டது. இப்படியான பின்புலத்தில் தான் அவர்களுக்கு கடின பந்து விளையாட்டிற்கும் உதைப்பந்தாட்டத்திற்கும் ஒரு ஒழுங்கான விளையாட்டு மைதானம் அமைய வேண்டும் என்று எல்லோருடைய ஏகோபித்த ஆதரவின் பிரகாரம் அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எங்களுடைய ஊரை விட சனத்தொகை குறைந்த ஊர்களிலே இருந்து Matting இனை கடனாக வாங்கி வந்து அதுவும் அரைவாசி பழுதடைந்த சிதைவடைந்த Matting இனை பாவித்து விளையாடி இந்தப் பிராந்தியத்திலே நடக்கின்ற சகல சுற்றுப்போட்டிகளிலே முதலிடத்திலே தொடர்ச்சியாக எங்களுடைய ஊரைச் சேர்ந்த அணி முன்னனி வகித்து வருகின்றது. அது எங்களது ஊருக்கு கிடைக்கின்ற பெருமை. ஆகவே அதனை ஒட்டியதாக அந்த மைதானத்திற்கு துடுப்பாட்ட வீரர்கள் பயிற்சி பெருவதற்காக கடின பந்து வலைப் பயிற்சிக் கூடாரத்தையும் இரண்டாவதாக கடின பந்திற்குரிய Matting தரையையும் அதனை பராமரிப்பதற்குரிய பாதுகாப்பு அறையையும் நிர்மானிப்பதற்கும். உதைப்பந்தாட்டத்திற்குரிய Movable Post அதனையும் அதனுடன் ஒத்ததாக மலசலகூடமும், நீரிணைப்பு வசதியையும் பெற்றுத்தருமாறு இந்த சபையை வேண்டி விண்ணப்பிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

என்னைப் பொருத்தவரைக்கும் மாற்றுக் கருத்துகள் இல்லை என்று நினைக்கின்றேன். நமக்கு இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் நிரந்தரக் கட்டடம் செய்வது என்றால் இன்னும் Vesting Order இல்லை. இந்த வேலைகள் உண்மையாக தற்துணிவில்தான் செய்யப்படுகின்றது. நிச்சயமாக ஒரு மலசலகூடம் இல்லை 03 மலசலகூடமாவது வர வேண்டும். Shower இருக்க வேண்டும். இப்படியானவைகளுக்கு இன்னும் ஒரு கட்டம் இருக்கின்றது. UDA இல் இருந்து ஒரு வரைபடம் வர வேண்டும். அந்தப் Plan என்னவென்றால் 400 மீற்றர் Track, Foot Ball, Cricket உம் அதற்கு அருகில் Netball, Basket Ball, Volley ball வரும். பின் துண்டை நிரப்பாமல் அதில் Administrative Block இனை செய்து கீழே Park பண்ணக் கூடியதாக மைதானம் வேறாகவும், வசதிகள் வேறாகவும் இருக்கும். அதைப் போல் பொருத்தமான இடம் இந்த ஊரில் இல்லை. அதை விமர்சித்தவர்கள் அதிகமானவர்கள்.

நேற்றுக்கூட நான் கேள்விப் பட்டேன் JCB வேலை செய்கின்றது என்று அதனால் நான் அவ்விடத்திற்கு சென்றேன். தனிப்பட்ட நபர் ஒருவர் அவரிடம் JCB இருக்கின்றது. அவரும் விளையாடுபவர். அவரும் கூட அந்த வேலையை செய்கின்றார். மக்கள் அதை பாரமெடுத்தால். நமது சுமை குறையும். அதில் மிகவும் ஆர்வமாக நடக்கின்றது. கடின பந்து pich ஒழுங்காக Lay பண்ணப்பட வேண்டும். ஒரே ஒரு பிரச்சினை மாறிகாலம் வந்தால் அதை சரியாக நிரப்பி எடுக்காமல் பாவிக்க இயலாது. அதை நிரப்புவது என்றால் 04 Level இருக்கின்றது. எல்லோரும் சொன்னார்கள் அதனால் High Tension வயர் செல்கின்றது என்று, நான் பொறியியலாளர்களுடன் கதைத்தவுடன் 2 ½ மீற்றருக்குள்தான் அதன் ஆபத்து இருக்கின்றது. அதற்கு அப்பால் இல்லை. முதல் நாம் பயப்படுவது மின் வெட்டுவதைப் பற்றி தற்போது எங்கு எல்லாம் Tower இருக்கின்றதோ அந்த Tower இல் இருந்து கிட்டத்தட்ட 2 கிலோமீற்றருக்கு மின் அடிக்கின்ற ஆபத்து இருக்காது. Tower இருப்பதால் அது ஒரு பாதுகாப்பு.

**தீர்மானம் - 04/56/09**

ஆலயடி வட்டை பொது மைதானத்தில் துடுப்பாட்ட வீரர்கள் பயிற்சி பெறுவதற்கான வலையினால் மூடப்பட்ட கடின பந்து வலைப் பயிற்சிக் கூடாரம் அமைப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/10**

ஆலயடி வட்டை பொது மைதானத்தில் கடின விளையாட்டுக்குரிய Matting (தும்பினாலான விரிப்பு) ஒன்றை கொள்வனவு செய்வதற்கும், அதனைப் பாதுகாத்து பராமரிப்பதற்குரிய பாதுகாப்பு அறை ஒன்றை நிர்மானிப்பதற்குமான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/11**

ஆலயடி வட்டை பொது மைதானத்தில் உதைப்பந்தாட்டத்திற்குரிய இடம்பெயர்ந்து வைக்கக்கூடிய (Movable Goal Post) இரண்டினை அமைப்பதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/12**

ஆலயடி வட்டை பொது மைதானத்தில் மலசலகூடம் அமைப்பதற்கும், நீரிணைப்பு பெறுவதற்குமான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய கௌரவ உறுப்பினர் பேசியவாறு மைதானத்திற்கு தேவையான முக்கியமான விடயம். இருந்தாலும் பக்கத்து ஊரில் இருந்து கடன் வாங்கி வந்த என்பது எமது ஊருக்கு ஒரு அவமானம். அதே மாதிரி கடந்த காலங்களில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் DCB Fund இல் ஒவ்வொரு Club இற்கும் ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் என்று கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இது என்ன செய்யப்படுகின்றது என்று தெரியாது. எனவே இந்த விளையாட்டை ஊக்குவிப்பதற்கு எங்களால் இயன்ற official ஆகவோ un official ஆகவோ செய்ய வேண்டியவைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தனிப்பட்ட பணம் கிட்டத்தட்ட 50000.00 ரூபா பணத்திற்கு வெளியார் வாகனங்களை ஹயர் பண்ணி செய்திருக்கின்றோம். இன்னும் ஒரு இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. வெளியார் வாகனங்களை ஹயர் பண்ணுவதற்கு. உதவி செய்ய விரும்புபவர்கள் அந்த விளையாட்டு கழகங்களை தயவு செய்து அணுகவும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

என்னை விட அனுபவம் உள்ளவர்கள் இந்த சபையில் இருக்க முடியாது. மைதானத்திற்குரிய வசதிகளை நாம் எப்போதும் அவசரப்படக்கூடாது. நான் நேற்று போய் சொன்னேன் என்னவென்றால் நமது JCB வேலை செய்தால் அடுத்த நாள் Roller வேலை செய்ய வேண்டும். நாம் வயல் level பண்ற மாதிரி விட இயலாது. நமது காலத்தில் இல்லாவிட்டாலும் அவ்விடத்தில் ஒரு Stadium வந்தால் நிச்சயமாக அவ்விடத்தில் வரும். எல்லோரும் அதை தொடரத்தான் வேண்டும். அந்த இடம் சிறந்த இடமாக மாறும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வெளியில் இருப்பவர்கள்தான் அதற்கு கூடுதலான நிதியை ஒதுக்கி இருக்கின்றார்கள். சர்வதேச ரீதியில் வருவது என்றால் நமது மைதானம் மாத்திரம்தான். இந்த வேலையை ஆரம்பிப்பது என்றால் நிரந்தரமானது. Pitch என்பது சாதாரணமானது அல்ல. அதற்கு என்று ஆட்கள் இருக்கின்றார்கள். தற்காலிகமாக நாம் நமது சபையால் செய்தாலும் நிரந்தரமான மைதானம் அமைக்கின்ற வரைபடத்தில் பாதிப்பு ஏற்படக்கூடாது. மாணவர்களுக்கு வழங்க வேண்டியதை வழங்கிவிட்டு மற்ற வேலைகளை Major திட்டத்தில் பாதிப்பு இல்லாமல் தற்காலிகமாக செய்ய வேண்டும்.

அத்துடன் Garments இற்கு பக்கத்தில் 06 ஏக்கர் காணி இருக்கின்றது. இந்த திட்டத்தில் சொன்னது என்னவென்றால் இலேசான வேலை புல் வளர்த்து பசுப்பால் உற்பத்தியை கூட்டுவது. அதற்கு உடனே நமது சபையால் ஒரு கடிதம் தாருங்கள் அதற்குரிய நடவடிக்கையை எடுப்போம். வேளாண்மை செய்கின்ற காணியில் புல் வளர்க்கின்ற திட்டம் வந்தாலும் அதற்கு அனுமதி வழங்குங்கள் என்று பிரதேச செயலாளருக்கு கூறியிருக்கின்றார். இதை நமது சபையால் புல் வளர்ப்பதற்காக கேட்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நிரந்தரமாக நாம் சென்றாலும் சபைக்கு வருமானத்தை ஈட்டக்கூடியவாறு இருக்கும். எலும்பு அரைக்கும் நிலையத்தில் வளர்க்கலாம், சந்தை வளவிலும் புல் வளர்க்கலாம். இன்றைக்கு கூட பத்திரிகையில் பால் உற்பத்தி மிகவும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. நம்மிடம் வளம் இருக்கின்றது. இதை கல்முனை மாநகர சபையிடம் கேட்டால் இது இருக்க மாட்டாது. நம்மிடம் பல இடங்கள் இருக்கின்றது. இந்த விடயத்தில் பாதுகாப்பு தேவையில்லை. குரங்குகள் வந்து அழிக்க வேண்டிய தேவை இல்லை. வேலியையும், ஒரு பாதுகாவலாளரையும் நியமித்தால் இதில் பிரயோசனமடையலாம். மிக முக்கியமாக இந்த 06 ஏக்கரும் நமது கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் ஒரு மாற்றுக் கருத்து இருக்கின்றது என்னவென்றால் அந்த 06 ஏக்கர் Factory உடன் சேர்ந்து இருக்கின்றது. அதே மாதிரி 08 ஏக்கர் மைதானத்திற்கும் வயல்களுக்கும் இடையில் இருக்கின்றது. புல் வளர்ப்பது என்றால் அவ்விடத்தைத்தான் யோசிக்க வேண்டும். இந்தப் பக்கம் Factory உம் வர வேண்டும். ஒரு முன்மொழிவு ஒன்று இருந்தது. அதற்கு முழு ஆதரவும் வழங்கப்பட்டது. சாக்கு அடிப்பது. நமக்கு ஒவ்வொரு போகமும் தேவைப்படுவது. அதற்கு ஒரு Factory இவ்விடத்தில் வரும் என்றால் நமக்கு இலகு. அதே மாதிரி Scouting Camp site மாதிரி அது நமது மைதானத்திற்கு அருகில் 1 ½ ஏக்கர் இருக்கின்றது. நாம் ஒன்று விளங்க வேண்டும் ஒரு Stadium வருகின்றது அந்த Stadium உடன் சேர்ந்து போகக்கூடிய மாதிரித்தான் போக வேண்டும். இல்லாவிட்டால் அது ஒரு தடையாக வரும். நமக்கு முதல் தந்த மைதானத்தை எவ்வளவு அபிவிருத்தி செய்தாலும் நமக்கு பகல் நேரங்களில் ஒன்றும் செய்ய இயலாமல் இருந்திருக்கும் ஏனென்றால் Court,SLIATE, VTA, Technical College இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மைதான திருத்த வேலைகள் செய்வது தொடர்பாக எங்களுக்கு சொந்தமான கனரக வாகனங்கள் இருக்கின்றது. அதை நான் தருகின்றேன். ஆனால் நிபந்தனை அதற்குரிய டீசல் தர வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அந்த மைதானத்திற்கு தேவையான மண்ணை நீங்கள் கூறிய 1 ½ ஏக்கரில் இருந்து எடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ ஜனாதிபதி அவர்கள் பிரதேச சபை தேர்தலுக்கு முதல் அங்கத்துவ குறைப்பு செய்வதாக பேசியுள்ளார். நான் நினைக்கின்றேன் 70%, 30% என்ற திட்டத்தின் கீழ் வரும் என்று, அடுத்தது Governing Council மாதிரி தவிசாளரின் தலைமையில் ஒரு Executive Committee உருவாக்க வேண்டும். இந்த சபை முன்னுதாரணமாக 2011 இல் இருந்து ஏறத்தாள 112 அமர்வுகளில்

Executive ஆகத்தான் சபையோ இயங்கி இருக்கின்றது. ஆனால் நாட்டுக்கு முன்மாதிரியாக நாம் ஒரு சபை அமைத்து இதில் தவிசாளர், SLFP சார்பாக உப தவிசாளர், ACMC இரண்டு குழு இருக்கின்றது. ஒவ்வொரு குழுவில் இருந்து ஒன்று. UNP இல் ஒன்று SLMC ஒன்று SLPP ஒன்று பெண்கள் சார்பாக இருவர். இவர்கள் 09 பேரும் ஒவ்வொரு கிழமையும் சந்திக்க வேண்டும். சபையின் நடவடிக்கைகளை அங்கீகரிக்க வேண்டும். நான் நாளாந்தம் செய்வதை இந்த குழு தீர்மானிக்கும். சபைக்கு அந்த முடிவுகள் வருகின்ற போது சபையின் அங்கத்தவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். எல்லாக் கட்சியையும் உள்வாங்கியதாக முன்மாதிரியாக இந்த நாட்டுக்கு இருப்போம் என்பது எனது விருப்பம். அதை இந்த சபை அங்கீகரிக்கின்றதா?

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறியது போன்று 2011 இல் இருந்து பிரதேச சபைக்கான தவிசாளராக இருந்து வருகின்றீர். சென்ற சபையிலும் நான் ஒரு அங்கத்தவராக இருந்த அடிப்படையில் உண்மைப்படுத்த வேண்டும். இன்றுவரைக்கும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எங்களுக்குள் பேசப்பட்டாலும் ஆனால் வரவு செலவுத் திட்டம் கூட ஏகமனதான தீர்மானம் என்ற அடிப்படையிலே சென்று கொண்டிருக்கின்றது. அது வரவேற்க வேண்டிய விடயம். ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு எல்லா சபைகளுக்கும் முன்னுதாரணமான சபையாக இருந்து வந்திருக்கின்றோம் என்ற விடயத்தை வெளிக்காட்டுவதோடு, இதற்கு மேலதிகமாக பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்ற போது சபையின் உறுப்பினர்களின் பங்களிப்பு கூடுதலாக இருக்கும் என்ற அடிப்படையில் நாங்கள் அதை செய்வது பொருத்தம் என்பதை சபைக்கு என்னுடைய கருத்தை தெரிவிக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் முன்னுதாரணம் செய்தாலும் செய்யாவிட்டாலும் இதுதான் எதிர் காலத்தில் நடைமுறைக்கு வரப் போகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபைதான் அந்தக் குழு.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபை கூடுவது மாதத்தில் ஒரு தடவை. அடுத்த சபை வரும் வரைக்கும் முழுச் சுமையும் ஒருவரில் இருக்கின்றது. உள்ளூராட்சி சட்டத்தின் படி சகல Executive Power உம் தவிசாளருக்கு. ஆனால் ஒரு தவிசாளரால் எல்லாம் செய்ய இயலாது. நாளாந்தம் ஒவ்வொரு விடயமும் பின் தொடரப்பட வேண்டும். Executive Committee ஒன்று வந்தவுடன். ஒவ்வொரு பொறுப்பையும் ஒவ்வொரு அங்கத்தவர் எடுக்கலாம். ஒவ்வொரு கிழமையும் கூடும் போது ஒருவர் இந்த விடயத்தை நான் மேற்பார்வை செய்கின்றேன் என்றால் சரி செய்யுங்கள். நாம் கூட்டுப்பொறுப்பு ஆனால் மாதத்திற்கு ஒரு தடவை கூடி செய்ய இயலாது. அதை விட ஒவ்வொரு கிழமையும் செய்யும் போது உங்களுக்கே விளங்கும் பல விடயங்கள் இலேசாக நடக்கும். சில நேரம் நீங்கள் கூறுவீர்கள் 54வது சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு Instruction ஆக நடைபெறுகின்றது என்று அறிவிக்கப்பட்டிருக்கும். ஏன் அதில் Followup இல்லை. இப்படியான ஒரு குழு இருந்தால் செய்யலாம்.

**தீர்மானம் - 04/56/12**

கௌரவ தவிசாளரின் தலைமையில் 09 அங்கத்தவர்களைக் கொண்ட Executive Committee ஒன்றினைத் தாபித்து சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/13**

கௌரவ உறுப்பினர் குலமணி அவர்களின் வேண்டுகோளுக்கமைய சமுர்த்தி வங்கியின் கிளையினை மல்வத்தை பிரதேசத்தில் நிறுவுவதற்காக சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கு சிபார்சு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.குலமணி |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/14**

LDSP இற்கான அவசர நெருக்கடிக்கு பதிலளிப்பதற்கான தகவல்களை அடையாளம் காண்பதற்கான செயலமர்வினை நடாத்தவும், அதற்குரிய செலவீனங்களை அனுமதிப்பதற்குமான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/56/15**

LDSP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் வேலைகளை செய்வதற்கான தீர்மானம்.

1. Construction of Children Park at Veeramunai – 01
2. Supplying fixing Solar Power System for Office Administrative Building, Viliniyadi -03 (LDSP Project PT 1)

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு மாதம் இரண்டு மாதம் என்று மழுங்கடிக்காமல் குழு அமைத்தால் வேலை செய்ய வேண்டும். சென்ற மாதம் குழு ஒன்று தீர்மானித்தோம். அந்தக் குழுவால் செய்த வேலை என்ன? அதே தற்போது அமைக்கின்ற குழுவும் மழுங்கடிக்கப்பட்ட குழு என்றால் அவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஒரு கூட்டத்திற்கு வரவில்லை என்றால் அடுத்த கூட்டத்திற்கு அந்தக் கட்சியில் இருந்து வேறு ஒருவர் எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லா உறுப்பினர்களுக்கும் மீண்டும் கடிதம் அனுப்பி இருக்கின்றார்கள். அவரின் பிரச்சினை என்னவென்பதை இந்த குழு தீர்மானிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த விடயத்தில் ஒன்று விளங்க வேண்டும் சபைக்கு என்று ஒரு அதிகாரம் இருக்கின்றது. உத்தியோகத்தர்களுக்கு ஒரு கடமை இருக்கின்றது. உத்தியோகத்தர்களின் வேலைகளை நாம் செய்ய இயலாது. அவர் Tower இற்கு விண்ணப்பித்தார். அதன் பின்னர் எதிர்ப்பு வந்தது. எதிர்ப்பு வந்தவுடன் தந்த ஆவணங்களை மீண்டும் ஆராயும் போது அந்தக் கட்டடம் ஒழுங்காக நிர்மானிக்கப்பட்டுள்ளது என்று கொடுத்த Certificate பிழை. கையொப்பமிட்டவன் நான். அது பிழை என்றால் அதை நிவர்த்தி செய்ய வேண்டும். ஆய்வு செய்யப் போனவர்கள் இதற்கு COC கொடுக்க

இயலாது என்றார்கள். சபைக்கு சமர்ப்பித்த படத்திற்கு மாறாக வீடு கட்டப்பட்டு இருக்கின்றது. அதன் UDA சொன்னார்கள் COC வழங்குகின்ற அதிகாரம் UDA இற்குதான் இருக்கின்றது. நீங்கள் வழங்க இயலாது என்று, COC இல்லாவிட்டால் அந்த Tower அவ்விடத்தில் வர இயலாது. COC இல்லாத கட்டிடம் செல்லுபடி இல்லாத கட்டிடம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த சபையில் பேசப்பட்டது என்னவென்றால் ஒருவரின் வருமானத்தை இன்னொருவர் தடுக்கின்றார். வருமானத்தை மீட்டக்கூடிய அளவுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அமைக்கப்படுகின்ற நேரத்தில் கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களின் தலைமையில்தான் அமைத்தோம். அதற்கு பின்னர் கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களின் தலைமையில் கடிதம் அனுப்பப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எனது கணிப்பில் அவர் ஒரு சட்டத்தரணி.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர் காரணம் சொல்லி இருக்கின்றார் அவர் கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை என்று, குழுவில் அமைக்கப்படுகின்றவர்கள் நிச்சயமாக அந்த விடயத்திற்கு சமூகமளிக்கக்கூடிய அங்கத்தவராக இருக்க வேண்டும். Call எடுத்தால் பதில் அளிக்காத, எந்தக் கவலையும் இல்லாமல் இருக்கின்றவர்களை இந்தக் குழுவில் போட வேண்டாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குழு நியமிப்பது என்பது நான் ஆரம்பத்தில் இருந்தே Cooperative நிலங்கள், தரிசு நிலங்கள், கடையறைகள், உதாரணமாக கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களின் வீட்டுக்கு அருகில் இருக்கின்ற MPCS காணி இந்த விடயங்கள் சம்மந்தமாக ஆரம்பத்தில் இந்த சபை ஆரம்பித்து 02வது கூட்டத்தில் கதைத்திருக்கின்றேன். நிலங்கள் எல்லாம் அடையாளப்படுத்த வேண்டும். அந்த நிலங்கள் சபைக்குட்பட்ட நிலங்கள் என்று நிலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் முன்னேற்றம் என்ன என்பது எனக்கு தெரியவில்லை. குழுக்கள் அமைக்கின்ற போது குழு ஒன்று சென்று தீர்மானம் எடுத்தால் அந்த தீர்மானத்தின் Validity என்ன என்று பார்க்க வேண்டும். அதன் சட்டத் தன்மை என்ன என்று பார்க்க வேண்டும். நாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றோம். மக்களின் பிரச்சினை ஊரின் பிரச்சினையைப் பற்றி கதைத்துக் கொண்டிருக்கின்றோம்.

எங்களுக்கு மேலதிகமாக ஒரு குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நானும் உறுப்பினாரக இருந்தேன். கௌரவ உறுப்பினர் அஸ்பர், கௌரவ உப தவிசாளர் அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ் நாங்கள் எல்லோரும் சென்றோம். HNB அருகில் ஒரு பிரச்சினை என்று பார்க்கச் சென்றோம். ஏதாவது ஒன்று நடந்திருக்கின்றதா? கௌரவ தவிசாளர் அவர்களால் நியமிக்கப்படுகின்ற இந்த சபை சென்று அவ்விடத்தில் கள விஜயம் மேற்கொண்டு உரிய நபர்களுடன் பேசி எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் சம்மந்தமாக இந்த குழுவால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் சட்ட வலிமை தன்மை என்ன? அப்படி சட்ட வலிமை தன்மை இல்லாமல் இருக்கின்ற போது ஆகக் குறைந்தது இணக்க சபைக்கு சென்றால் கூட இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்பது ஒரு முகத் தோற்ற அளவிலான சாட்சியமாக அமையும். சபையால் எட்டப்பட்ட தீர்மானம் கேள்விக்கு உட்படுத்தப்பட மாட்டாது. இணக்க சபையால் வழங்கப்படுகின்ற கடிதமே நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றாக அமையும். நாங்கள் கள விஜயம் சென்று ஒரு சான்று கொடுக்கப் போகின்றோமா? சமாதானத்திற்கு எட்டக்கூடிய முயற்சி இருக்கின்றதா? நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றிருக்கும் போது குழு அமைத்து கள விஜயம் மேற்கொள்கின்றோம்.

கௌரவ தவிசாளர் அவர்கள் என் மீது வைத்த நம்பிக்கைக்கு என் மீது பொறுப்புச் சாட்டுதல் உண்மையாக நான் ஏற்றுக் கொள்கின்றேன். சபையிடம் அந்தக் குழுவிற்கு நான் தலைமை தாங்கிச் செல்லாததற்கு மன்னிப்பும் கோருகின்றேன். காரணம் என்னவென்றால் அது புரையோடிக் கிடக்கின்ற பிரச்சினை. எவ்வளவு காலா காலமாக சகலனுக்கும் சகலனுக்கும், அக்காவுக்கும் தங்கைக்கும்

இடையில் இருக்கின்ற பிரச்சினையை அவர்களுக்குள் ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்ள இயலாமல் எங்களது பிரச்சினையாக்கினால் எப்படி நாங்கள் தீர்மானம் எடுப்பது. திருமணம் முடித்த காலத்தில் இருந்து இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்றது. ஒரு தனிநபரின் பிரச்சினையை ஊர் பிரச்சினையாக மாற்றுவதற்கு அவர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார். அவருக்காக ஆரம்பிக்கப்பட்ட சபை அல்ல இது. சபைக்கு அந்தப் பிரச்சினை கொண்டு வர வேண்டிய தேவையே இல்லை. சபையால் தீர்மானம் எடுக்க வேண்டிய பிரச்சினையே இல்லை. நீதிமன்றத்தால் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை. நீதி மன்றத்திற்கு போனால் அத்தனை முயற்சிகளும் தோல்வியடையும். எனவே அவருக்கு தெரியும். என்னுடைய அறிவுக்கு எட்டியபடி நான் நினைக்கின்றேன். அவரின் பின்புலத்தில் தீர்க்கமான அனுபம் பெற்ற சட்டத்தரணியின் ஆலோசனையோடு இந்த சபையின் ஊடாக நெருங்கி அதை ஊர் பிரச்சினையாக்குவதாக எனக்கு விளங்குகின்றது.

ஆனால் அது புரையோடிக் கிடக்கின்ற பிரச்சினை. இந்த பிரச்சினைக்கு நாங்கள் குழுக்கள் அமைத்து அவ்விடத்தில் சென்று நாங்கள் என்ன செய்யப் போகின்றோம். என்ன தீர்மானம் எடுக்கப்போகின்றோம். இந்தக் கடிதத்திலே தெளிவாக கூறுகின்றார் 50 மீற்றர் Tower அமைப்பதாக. Tower அமைப்பதற்கும் இந்த சபைக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது. இந்த சபையினுடைய உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள். கள விஜயம் மேற்கொண்டு அதற்கு சுற்றாடல்களை பார்க்க வேண்டும். அதன் உயரத்தை பார்க்க வேண்டும். எனக்கு தெரிந்து நான் அதில் திறமைசாலி இல்லை. அது சம்மந்தமாக என்னால் என்ன கருத்து கூற முடியும். ஒரு தனி நபருடைய பிரச்சினையை சபையின் பிரச்சினையாக இந்தசபையின் பிரச்சினை என்றால் இந்த ஊரின் பிரச்சினை.

ஒரு தனிநபர் அவருடைய தனிப்பட்ட பிரச்சினையை ஊர் பிரச்சினையாக மாற்ற எடுக்கின்ற முயற்சியாகத்தான் எனக்கு தெரிகின்றதே தவிர மேலதிகமாக அந்த வழிப் பிரச்சினை ஆகக் குறைந்தது இந்த சபையால் எடுக்கப்படுகின்ற அல்லது சபையால் நியமிக்கப்படுகின்ற குழு கள விஜயம் மேற்கொண்டு அந்தக் குழுவால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு இரு திறத்தவர்களும் கட்டுப்படுவார்கள் என்று உத்தரவாதமாக தருவார் என்றால் கௌரவ உறுப்பினர்கள் கௌரவ தவிசாளரின் வேண்டுகோளுக்கமைய ஒரு கள விஜயத்தை மேற்கொள்ளலாம். இதுவரையில் இந்த சபையில் கேட்கின்றேன் ஒரு நாள் தவிர வேறு ஏதும் கள விஜயம் மேற்கொள்ளவில்லை. சபை உறுப்பினர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றதா? அல்லது சரி என ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றதா? ஆகவே ஏன் அதை நாம் செய்ய வேண்டும். ஆகக் குறைந்தது இந்தப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட திறத்தார்கள் பிரதேச சபைக்கு கௌரவ தவிசாளர் முன்னிலையில் அழைக்கப்பட்டு குழு விஜயம் மேற்கொண்டு குழுவால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு கட்டுப்படுவோம் என்ற உத்தரவாதத்தை எழுத்து மூலம் தருவார்களானால் அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் நான் செல்லுவதற்கு தயார் என்று இந்த சபையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த நிலைப்பாட்டில் தான் நானும் இருந்தேன். நாம் என்ன விஜயம் செய்தாலும் சட்டத்திற்குள் தான் முடிவுகள் எடுக்கலாம். இல்லாவிட்டால் அவர்களுக்குள் சம்மதம் வந்து அவர்கள் இரண்டு பேரும் சபைக்கு முன்னுக்கு சம்மதித்து கையொப்பமிடுவார்கள் என்றால் அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்றாலும் அதை சமர்ப்பிக்கலாம். ஆனால் சட்டத்திற்கு முரணாக குழு சிபார்சு செய்தாலும் செய்ய இயலாது. சபை ஒன்றுமே செய்கின்றது இல்லை என்று சொன்னதற்காகத்தான் நான் சொன்னேன் நீங்கள் சென்று பாருங்கள் என்று, எல்லாம் சட்டத்திற்குள்தான் இருக்க வேண்டும். சபையிலும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சட்டம் இருக்கின்றது. அந்த சட்டத்திற்குள் நமக்கு செயற்படுத்த இயலும் என்றால் செய்யலாம். இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய இயலாது.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

நீங்கள் கேட்டுக் கொண்டவாறு சென்ற மாதத்தின் செலவீனங்கள் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 200 சுகாதார சேவைகளில் 7வது சபைக்கு சொந்தமான JCB வாகனம் திருத்தம் நடப்பதால் வாடகைக்கு JCB எடுத்த கொடுப்பனவு. இதில் எத்தனை மணித்தியாலயங்கள் வேலை செய்யப்பட்டது?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதன் விபரங்களை செயலாளரிடம் எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறைந்தது அதில் நான் அறிய வேண்டிய விடயம் என்னவென்றால் ஒரு மணித்தியாலயத்திற்கு எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்காக ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த அறிக்கையில் அப்படி விபரங்கள் வராது. நீங்கள் செயலாளரிடம் கேட்டு எடுக்கலாம். இதில் பிரச்சினை என்னவென்றால் நமது Tractor கள் எல்லாம் 15 வருடத்திற்கு மேற்பட்டது. அதை அனுப்புவது என்றால் பாரிய செலவு. இதனால் நாம் இவ்வளவு காலமும் நமது JCB இல் செய்தது. நமது JCB ஐ திருத்துவதற்கு கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது அதற்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு. நீங்கள் சொல்வது சரி. அதன் விபரங்களை எடுக்கலாம்.

**தீர்மானம் - 04/56/16**
சென்ற மாதம் 2022.09.01 தொடக்கம் 2022.09.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம்.முஸ்தபா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

இத்துடன் சபை அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை